# சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஆய்வாளர்களின் கருத்துக்கள் - ஒரு மீள் பரிசீலனை

கலைவாணி இராமநாதன்

**ஆய்வுச் சுருக்கம்:**

*மிக நீண்ட காலமாக இந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களால் உருவாக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டிருந்த நகர நாகரீக வாழ்வின் அடியாகத் தோற்றுவிக்கப்பட்டிருந்த இந்திய சமய முறையானது இந்தோ - கங்கைப் பள்ளத்தாக்கில் இரண்டாவது தடவையாக நகரமயமாக்கல் முறையினை உருவாக்கித்தந்த இந்தோ - ஆரிய இனமக்களால் அழித்தொழிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை இவ்வாய்வுக் கட்டுரை உறுதிப்படுத்த முயல்கின்றது. ஆனால் திராவிடர்- ஆரியர் என்ற இனவேறுபாட்டினை மட்டும் மையப்படுத்திய வகையில் இந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரீக வாழ்வின் வீழ்ச்சிக்கும், முடிவுக்கும் ஆரியர் படையெடுப்புக்கள் காரணமா அமைந்திருந்தன என்ற வரலாற்றாசிரியர்களின் கூற்றுக்களை இருக்குவேத கால பாசுரங்களில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இக் கட்டுரை மறுதலிக்க முயல்கின்றது. இருக்குவேத சமய பாசுரங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புக்களை சிந்துவெளியில் தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களுடன் ஒப்பிட்டு சிந்துநதிப் பள்ளதாக்கு மக்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இன்னொருகட்ட பண்பாடே இருக்கு வேத கால இந்துதோ - கங்கைப் பள்ளத்தாக்கு வாழ்க்கை முறையாகும் என இக் கட்டுரை உறுதிப்படுத்துகின்றது. சிந்துவெளி நகர வாழ்விற்கும் வேத கால நாகரீக வாழ்விற்கும் தொடர்பே இல்லையென்று இருந்த காலகட்டம் இன்று விலகி, சிந்து வெளி நாகரீக மக்களின் சமய - சித்தாந்த - தத்துவார்த்த சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஒரு திறவுகோலாக இருக்கு வேதபாசுரங்கள் இன்று கையாளப்பட்டுக்கொண்டு வரப்படுவதனை பரவலாக காணமுடிகிறது. இக் கருத்தோட்டத்தினை நிறுவுவதாகவே இவ் ஆய்வுக் கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** தகவல்மையம், திறவுகோல், ஆத்மா, உருத்திரன், ஹரியூபா, ஹரப்பா, நாகவழிபாடு, லிங்க வழிபாடு, தாய்த்தெய்வழிபாடு, மத்தியதரைப்பண்பாடு, ரிஷிகள், லிங்க யோனி வழிபாடு, தஸ்யூக்கள், புரந்தரன், ஆரியர்

## 1. அறிமுகம்

இந்திய வரலாற்றிலே திராவிட மக்களதும் அவர்கள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பெரும் பணிகள் பற்றியும் ஆய்வுகள் இற்றைவரை சரிவர அமையவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் தமிழ் ஆய்வியலாளர் மத்தியிலே கணிசமாக நிலவுகின்றன (வித்தியானந்தன்,சு., *1954*,ப. *13*).

இந்திய உபகண்டத்தில் தமிழரது மூதாதையர்களான திராவிடர்கள் தனிப்பட்ட சால்பினை உடையவராக வாழ்ந்து ஆரியமக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பலபல வழிகளில் துணைபுரிந்து இந்தியப் பண்பாட்டினைக் கட்டியெழுப்பியதுடன் இவ்விரு கூட்டத்தாருக்கும் ஒருங்கே உரிய பண்பாடு உருவானது இந்துநாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்ட பழம்பெரும் நாகரிகங்களில் சிந்துவெளி நாகரிகத்தின் பங்கு தலையாயது. உலகின் காலத்தால் முற்பட்ட நாகரிகங்களில் நாகரிகங்களில் ஒன்றான இந்நாகரிகம் ஸக.மு. 4500 ஆண்டுகட்கு மேற்பட்ட பழமை வாய்ந்துள்ளது. இந்துநதிப் பிரதேசத்தில் (தற்போது பாகிஸ்தானின் பகுதிகளாக உள்ளவை) நிகழ்த்தப்பட்ட அகழ்வ

ராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்கள் இப்பண்பாட்டின் தொன்மைக்கு சான்று பகர்கின்றன.

சிந்துவெளித் தொல்லியல் காட்டிய நகரங்களின் எச்சங்களை ஆராய்ந்த தொல்லியல் ஆய்வாளர் பலரும் இந்தியப் பண்பாடு, நாகரிகக் கூறுகள் பலவற்றிலும் காணப்படும் நம்பிக்கைகள் - குறிப்பாக சிவவழிபாடு, லிங்க வழிபாடு பேரன்னை வழிபாடு, இயற்கை வழிபாடு முதலியவற்றின் மூலக்கூறுகளை அந்நாகரிகத்திலும் கண்டு இனங்காட்டியுள்ளனர். அது மட்டுமன்றி மேற்படி எச்சங்களிற் காணப்படும் எழுத்துக் குறியீடுகளை இந்திய மொழிக்குடும்பங்களில் ஒன்றான திராவிடமொழியுடன் தொடர்பு படுத்தியும் ஆய்வுகள் நடத்தி யிருந்தனர். இவ்வாறு தொடர்பினை நிலைப் படுத்தும் ஆராய்ச்சிகள் சமீபகாலங் களில் வலுவடைந்து வருகின்றன. அத்தகைய ஆய்வுகளின் அடிப்படைத் தரவுகளில் ஒன்றாக இருக்குவேதம் தரும் குறிப்புக்கள் அதிகளவு அறிஞர்களது ஆய்வுகளில் முக்கியத்துவம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிந்துவெளி நாகரிகத்தின் தொன்மையினை அதன் சமய நம்பிக்கைகளை பண்பாட்டு அம்சங்களை உறுதிப்படுத்தும் எழுத்திலக்கிய ஆதாரங்கள் அறியப்படவில்லை என வாதிடும் காலம் மறைந்து இருக்கு வேதமே சிந்து வெளிப் பண்பாட்டின் தொன்மைக்கான மூலாதாரமாக அமைகின்றதோ என்னும் ஆய்வினை அறை தூண்டிவிடுவதாகவும் அமைந்துள்ளன.

பண்டைக் காலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்? அவர்களது கலாசாரம், பண்பாடு எப்படி அமைந்திருந்தது? அவர்களது உணவு, உடை, தொழில், கல்விமுறை பற்றி ஏதாவது எழுதி வைத்திருந்தால் அதனைப் புரிந்து கொள்ளலாம். வரலாறு என்னும் வடிவில் இல்லாவிடினும், இலக்கியம் இதிகாசம், கல்வெட்டு தரும் சமிக்ஞை மூலமும் இவை கிடைக்கத்தான் செய்கின்றன. இந்தவகையில் இருக்குவேதமே இந்தியாவின் மிகப் புராதன இலக்கியப்படைப்பாகவுள்ளது. *இது சுமார் கி. மு. 3500 வருடப் பழமை வாய்ந்த தென்பர் (பரமேஸ்வரன், எம்.பி., 1990, ப. 19).*

எகிப்திய நாகரிகம் தொடர்பான இலக்கியத் தரவுள் கி.மு 5000 வருடப் பா;மை கொண்டவை. ஆனால் சிந்துவெளி நகரங்களில் அத்தகைய தஸ்தாவேஜீக்கள் கிடைக்கவில்லை. 5000 வருடங்கட்கு முன் எழுதுவதனால் ஏதாவதொரு மொழியில் எழுத வேண்டும். ஆனால் பேசும் மொழிகள் முதல் முதல் உச்சரிப்புடன், வாய்மொழிகளாய் மட்டும் இருந்திருக்க வேண்டும். *அதனை வரமொழி என்கிறார்கள். அது உருவம் பெற சுமார் 5000 ஆண்டுகள் சென்றிருக்கலாம் (பரமேஸ்வரன், எம்.பி., 1990, ப. 19).*

அதுமட்டுமன்றி அவர்கள் விட்டுச் சென்ற கருவிகள், பாத்திரங்கள், அணிகலன்கள், பதுமைகள், கல்லறைகள் மூலமும் அவர்கள் வாழ்க்கை, பண்பாடு பற்றி அறிய உதவுகின்றன. இத்தகைய ஆய்வு 'விஞ்ஞானம்' எனில் தொல்பொருள் விஞ்ஞானத்தின் உதவியுடன் பயிலும் வரலாறு பண்டைக்கால வரலாறு எனப்படும் இது எழுதப்பட்ட வரலாற்றினை விட காலத்தைவிடப் பன்மடங்கு நீண்டு செல்வதாகும். பூமிக்கடியிலிருந்து பழங்கால வரலாற்றினை அறியும் முறை ஏற்பட்டு 200 வருடங்கள் தான் ஆகின்றன. கிரேக்க, ரோமானிய, எகிப்திய மொசப் பெத்தேமிய சிந்துநதி நாகரிகங்களில் நிலவிய புராதன நாகரிகங்கள் பற்றி இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டதை தொல் பொருட்களிலிருந்துதான் அறிய முடிந்தது. ஒரு பாத்திரம், எலும்புத்துண்டு, நகை இவற்றினை வைத்து 3500, 1500 வருடப் பழமை வாய்ந்தது என காலப்பா;மையினை ரேடியோ

அக்ரிவிற்றியைப் பயன்படுத்தியே அறிந்து கொண்டனர். இவ்வாறு காலப்பழமையினைக் காலநிர்ணயம் செய்து காட்டும் முறை 'ரேடியோகார்பன் காலம் அளத்தல்' எனக் கூறப்பட்டது (பரமேஸ்வரன், எம்.பி., 1990, ப. 27).

1921 - 22 இல் சிந்து நதிக்கரைநாகரிகம் வெளிப்படுத்தப்பட்டபோது களிமண்ணால் செய்யப்பட்ட படிமங்களும், சில முத்திரை களும் கல்வெட்டெழுத்துக்களுமே ஒட்டு மொத்தமாகக் கிடைத்தன. எழுத்திலக்கிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. சிந்துவெளி முத்திரைகளில் காணும் லிபி வியாபார சம்பந்தமான கணக்குகள் - புரிய முடியாத வரிவடிவங்கள் எனப்பட்டன. அந்தநிலையில் மொகஞ்சதரோ ஹரப்பா நாகரிகங்களின் ஆரம்ப வடிவங்கள் கி.மு 2500 - 3000 ஆண்டுகட்கு முற்பட்டவை என அறியப்பட்டன. ஆனால் பிரமாண்டமான நகரங்களையும் கட்டிடத் தொகுதிகளையும் கொண்ட அவர்கள் நாகரிகம் முற்றிலுமாக வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. இக்காலகட்டத்தில்தான் ஆரியமக்களுடைய வருகை அமைகின்றது.

**சிந்துமுத்திரைகள் காட்டும் மொழி பற்றிய ஆய்வுகள்**

'ஆரிய மக்கள் இந்தியாவுக்கு வரமுதலே சிந்துநதிப் பள்ளத்தாக்கில் மெசப் பெடோமியருக்கு சமகாலத்தவராகிய ஒரு நாகரிக இனத்தவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் தந்தைவழிச்சமுதாயத்தவரான ஆரியர்களைவிட நாகரிகத்தில் உயர்ந்தவராயிருந்தனர். அவர்களை கி.மு. 1800 அளவில் ஆரியர் தோற்கடித்து அங்கு தமது அதிகாரத்தை நிலைபெறச் செய்தனர் என ராகுல் சாங்கிருத்தியாயன் என்ற அறிஞரும் குறிப்பிட்டுள்ளனர். சிந்துவெளி அழிவிற்குப் பின்னர் அதே இடங்களில் ஆரியர்கள் குடியிருந்தனர் என்பதனை பல அறிஞர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர் (ராகுல் சாங்கிருத் தியாயன்., 1985, ப. 02).

இங்கு 'திராவிட'என்னும் பதம் ஒரு குறிப்பிட்ட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஓரினத்தவரையும், 'ஆரியர்' என்னும் பதம் இன்னோர் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இனத்தவரையும் குறிக்கும் பதமாகக் கையாளப்படுகின்றது. 1970ஆம் ஆண்டு முதலே சிந்துவெளி எழுத்துக்கள் கணினிக் கருவி மூலம் ஆராயப்பட்டு வந்துள்ளது. தொறொஸொவ் தலைமையிலான ரஷ்ய ஆய்வுக்குழுவினர் இவ் எழுத்துக்களின்படி இது திராவிட மொழியினருக்குச் சொந்தமான நாகரிகம் எனக் குறிப்பிட்டுள்ளனர். (சிவசாமி, வி., 1973, பக். 06 - 07).

எனினும் சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கல் பற்றிய தொன்மை, முடிவு, அழிவு அதனை ஆக்கிய மக்கள், இனம், மொழி என்பன கடந்த 50 வருடங்கட்கும் மேலாகக் கேள்விக்குரியனவாகவே இருந்து வருகின்றது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது போன்று தற்போது 15 வருடங்களாகவரும் ஆய்வுகள் அவற்றைத் தெளிவுபடுத்த முயல்கின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது சிந்துவெளி மக்கள் ஆரியரா? ஆரியரல்லாதவரா அல்லது திராவிடமக்களா? என்பதேயாகும். இந்தியத் துணைக்கண்டத்திலும், ஐரோப்பிய நாடுகளில் சிலவற்றிலும் உள்ள தொல்பொருள் ஆய்வுத்துறை அறிஞர்களும், மொழியியல் நிபுணர்களும் இத்திசைநோக்கித் தமது ஆய்வுகளைத் திருப்பியுள்ளமை அதன் ஆய்விலே பயன்தரும் தகவல்கள் வெளியிடப்படக் காரணமாயுள்ளன.

20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆய்வுகளில் ஒன்று சிந்து வெளி நாகரிகம் பற்றியதாகும். கோபன்கேகனில் உள்ள ஆய்வுக்கட்டுரை ஒன்றில் இந்தநாகரிகம் திராவிடநாகரிகம்எனகம்பியூட்டர்மூலம்அதன் எழுத்துக்களை ஆராய்ந்து அறிவித்துள்ளன. இதே முடிவினை தமிழக அறிஞர் ஐராவதம் மகாதேவனும் துணிந்து வெளியிட்டுள்ளார்

(Astoparpolo, *1969'* Mahadevan,I, *1977 - 1978*, PP-32 - 42). சிந்துவெளி எழுத்துக்களைப் படிப்பதில் ஹெரஸ் பாதிரியார் முதல் ஐராவதம் மகாதேவன் வரை பலரும் பினிஷ் குழுவினரும் சோவியத் ஆய்வுக் குழுவினரும் தமது கணிப்பொறி ஆய்வில் சிந்துவெளி எழுத்து திராவிடம் என உறுதிசெய்தனர். பேராசிரியர் இந்திரபாலாவும் ஆனைக்கோட்டை செப்பேட்டின்படி சிந்துவெளி தமிழ் - பிராமி என இரு மொழி முத்திரையாகலாம் என்றார் (மதிவாணன், இரா., *1991*, ப. *52*).

பாக்கிஸ்தானின் சிந்துப்பள்ளத்தாகில் வாழும் மக்கள் சிந்துமொழி பேசுவோர் பற்றி இஸ்லாமாபாத் பல்கலைக்கழக துணைவேந்தர் தமது ஆய்வில் "சிந்துமொழி திராவிட மொழிகளில் ஒன்று அது இலக்கண அமைதியிலும் மொழியியல் அமைப்பிலும் திராவிட மொழிகளை ஒத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். சிந்துவெளி எழுத்தினை அறிதல் வெற்றிபெறாது என்ற நிலையில் அதனை அவரது கட்டுரை மாற்றியமைத்தது (Allan,DR., *1962*).

வரலாற்றிலே பல இனங்கள் தமது தாய் மொழிகளைக் கைவிட்டுப் பிறமொழிகளை ஏற்றுள்ளனர். இந்து ஆரிய திராவிட மொழிகளிலே விற்பன்னரான பேராசிரியர் பறோ (Burrow) இருக்கு வேதத்தில் 25 திராவிட மொழிச் சொற்கள் இருப்பதாகக் காட்டியுள்ளார். (Burrow,T., *1968*, ப. *309*). அவரது ஆய்வினையே Dr. அவானவின் ஆய்வு உறுதி செய்வதாக உள்ளது. எனவே ஆரியமக்கள் வருகைக்கு முன்னரே திராவிடர் மத்தியதரைப் பிர தேசத்திலிருந்து இந்தியா வந்திருப்பர். இரு இனத்தாருக்கும் இனம், கலாசாரம் தொடர்பாகப் போர்கள், கலகங்கள் நிகழ்ந்திருக்கலாம். இதன் எதிரொலிகளையே இருக்கு வேதத்திற் காண்கின்றோம் என அறிஞர் பலர் கருதுகின்றனர். (Burrow,T., *1968*, ப. *309*). ஆதலால் இருக்குவேதம் தரும் சிந்துவெளி நாகரிகம் பற்றிய தகவல்களை அறிவது மிகவும் இன்றியமையாததாகும்.

சரித்திரம் எழுதுவது இருக்குவேதகால ரிஷிகளின் நோக்கமல்ல. இயற்கையைப் போற்றி வழிபடும் அக்கால மக்கள் அதன் தொடர்பால் 'நிலவியல்' புவியியல் போன்ற விடயங்களையும் ரிக்வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர். அதனாலேயே ரிக்வேதத்தின் மதிப்பு பன்மடங்காக உயர்ந்து விட்டது. தந்தையும் மகனுமான திவோதாஜனும் அதாஜனும் ரிக்வேதத்தின் தலைசிறந்த கதாநாயகன் என்பர் ராகுல்ஜி. (ராகுல் சாங்கிருத்தியாயன்., *1991*, பக். *6-7*). அந்தக்காலம் பற்றி மிகவும் மதிப்புள்ள செய்திகளை ரிக்வேதம் தெரிவிக்கின்றது. சுமார் *3000* ஆண்டுகளின் வரலாறும் இதில் பத்திரமாக பாதுகாக்கப்படுகின்றது. ஆரியருக்கு முந்திய வரலாறு பற்றி எழுத்து வடிவத்தில் இல்லை எனக் கூறுவது முற்றிலும் உண்மையல்ல. ஏனெனில் மொகஞ்சதரோவிலும் ஹரப்பாவிலும் ஆயிரக்கணக்கான முத்திரைகள் கிடைத்துள்ளன. அவற்றிலே எழுத்துக்களுமுள்ளன. எனவே அவற்றினை வாசிக்க முடியவில்லை என்பது இன்றைய தலைமுறையினரின் குறைபாடே தவிர அதனைச் சாட்டாக வைத்து சிந்துவெளிகளின் வரலாற்றினை இருட்டடிப்புச் செய்வது வரலாற்றினைத் திரிபுபடுத்துவதாகும்.

மொகஞ்சதரோ மக்கள் தாமிர, பித்தளை யுகத்தினையும் கடந்து செல்வம் கொழித்த மாளிகைகளில் சுகாதாரமான வாழ்வினை மேற்கொண்டனர். சிந்துவெளி நகரங்களின் சிறப்பான காலம் கி.மு 2500 எனப்படும். அதற்குப் பின் சில ஆயிரம் வருடங்களின் பின்னரே சிந்துப் பிரதேசத்தில் ஆரிய மக்கள் பிரவேசித்தனர். ஆரியருக்கும் பழய சிந்து மக்களுக்குமிடையே நடந்த சண்டைகளே தேவாசுர யுத்தமாக ரிக்வேதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன (ராகுல் சாங்கிருத்தியாயன்., *1991*, ப.*7*).

இந்தியாவில் ஹரப்பா கலாசார முடிவு கி.மு 1500 ஆரியர் வருகையுடன் முடிகிறதென மாட்டிமர் வீலர் பறோ, ஸ்ரூவட் பிகொற் போன்றோரும் வற்புறுத்தியுள்ளனர். எனவே ரிக்வேத ஆரியர்கள் கிராதகர், ஆதிவாசிகளுடன் போரிடவேண்டிய நிலை ஏற்பட்டமை பற்றிய தகவல்களை அறிவதும் அவசியமானது.

**இருக்குவேதம் தரும் போர்ச் செய்திகள்**

சிந்து நகரங்களின் வீழ்ச்சி பற்றி குறிப்பிடும்போது பூமியில் ஏற்பட்ட இயற்கை யான பௌதீக அழிவும், இயற்கையுடன் ஏற்பட்ட போராட்டமும் கூட ஒரு காரணமா கலாம். இயற்கை அழிவுகட்கு எதிராக நிற்கும் பலமும் குறைந்து சென்றிருக்கலாம். இறுதியில் ஆரியர் வருகையுடன் அவர்களது தாக்குதல்களும் சேர்ந்து கொண்டன. அடுக்கடுக்காக அமைந்து காணப்படும் சில உரையாடல்களும் இத்தகைய செய்திகளுடன் ஒத்துப் போவதாக இருக்கின்றன மோதல் பயந்து ஓடுதல் - ஆகியவற்றின் அடையாளங்களும் டசின் கணக்கான எலும்புக் கூடுகள், வாள்வெட்டில் காயமடைந்த மண்டையோடுகள் தெருக்களில் அறைகளில் செத்துக் கிடந்த எலும்புக்கூடுகளுடன், முறைப்படி அடக்கம் செய்யப்பட்ட எலும்புக் கூடுகளும் காணப்பட்டன. மிகக் குறுகிய காலத்தில் நடைபெற்ற ஒரு யுத்தத்தை அங்கு காண முடிகிறது. ரிக்வேதம் இந்திரனை புரந்தரன் என அழைக்கப்படுகின்றது. புரந்தரர் என்பதன் பொருள்நகரங்களைத்தகர்ப்பவன்என்பதாகும். எனவே அவர்கள் தகர்ந்த நகரங்களில் ஒன்றின் பெயர் 'ஹரியூபா' என்றுள்ளது. இது இன்றைய ஹரப்பாவாக இருக்க வேண்டும். (பரமேஸ்வரன், எம்.பி.,சிவசாமி,வி., 1973, பக். 21-23).

ரிக்வேதம் 6ஆம் மண்டலத்தில் 765 பாடல்கள் உள்ளன. இதில் பெரும்பகுதி பரத்துவாஜரால் பாடப்பட்டது. அவர் சப்தரிஷிகளில் ஒருவர் (6.3.2)இவற்றிலே ஆரிய மக்களுடன் போரிட்ட வீரர்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ரிக்வேதம் 2.16 4.30 6.27 7.99 ம் சூக்தம் ஆகியவற்றில் காணப்படும் பாடல் கள் தருகின்ற செய்திகள் ஹரப்பா நாகரிகப் புதிருக்கு விடையளித்துள்ளன. எனக் கருதலாம். ரிக்வேதம் 2ம் மண்டல 400க்கு மேற்பட்ட பாடல்கள் கிருத்ஸமதன் ஒருவனே பாடியவையாக உள்ளன. அவர் தாசர்களை - தஸ்யுக்களை அதிகமாக வெறுத்தவனாகக் காணப்படுகின்றான். (ஜம்புலிங்கம் பிள்ளை.எம்.ஆர்., 1977).

ஆரிய மக்கள் சிந்து இனமக்களை விரோதிகளாக ஆரம்பத்தில் நடத்திய பாடல்களில் கருப்புதாசர்களை இந்திரன் அழித்தான் (2.20.7) எனவும் இந்திரன் கரியமேனியைக் கொண்டவர்களைக் கொன்றான் எனவும் (1.130.8) தாசர்களின் இணையற்ற அரசன் சம்பரனை திவோதாஸ் வெற்றி கொண்டான் எனவும் (சிவசாமி, வி., 1973, ப.39).

சம்பரனின் 99 கோட்டைகளை அழித்தது பற்றி கிருத்ஸமனும் (2.19.4) இந்திரனும் 50 கருப்பர்களையும் அவர்களது புரங்களையும் (கோட்டைகள்) அழித்ததாக (4.16.13) ரிஷிவாமதேவரும் இந்திரன் தாசதளபதி பிப்ருவுடன் நடைபெற்ற யுத்தத்தில் ரிஷிஸ்வா என்ற ஆரியவிரனைக் காப்பாற்றினான் என (1.51.5) ஆக்ரஸரும் குறிப்பிட்டுள்ளனர். சம்பர மன்னர் யுத்தம் போல பத்து மன்னர் யுத்தமும் பேர்பெற்ற யுத்தமாகும். இந்திரனும் வருணனும் பத்து மன்னர்களால் தாக்கப்பட்ட சுதாஸை சேர்ந்து காப்பாற்றினர் (7.83.6.7) என்கிறார் வசிட்டர். மற்றோர் இடத்திலும் (7.83.8, 7.18.5) மற்றோர் சுதாஸை இந்திரன் முதலிய தேவர்கள் காப்பாற்றினர் என விரிவான தகவல்களைத் தந்துள்ளனர்.

மேலும் தாசமன்னன் வரசிகளையும் அவனது மக்களையும் உத்விரஜ நாட்டில் நடந்த யுத்தத்தில் திவோதாஸ் என்ற ஆரியத் தலைவன் கொன்றான் என காக்கினும், வசிட்டரும் கூறுவர். (6.42.21, 7.99.5) அவர்களது கூற்றிலிருந்து நூறாயிரம் வீரர்களுடன் சேர்ந்து வரசினன் கொல்லப்பட்டான் என்னும் போது பெரும் எண்ணிக்கையில் தாசர்கள் போரில் கொல்லப்பட்டார்கள் என அறியமுடிகிறது. (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, ப.107). இதனை கிருஶ்ஸமனும் (2.14.6) (2.12.14) வாமதேவரும் கூடக் குறிப்பிட்டுள்ளனர். (4.30.15) ஹரியூபா என்ற இடத்தில் ஆரியத்தலைவன் வரசினனை யும் புதல்வர்களையும் கொன்றதாக 6ஆம் மண்டலத்தில் வரும் குறிப்புக்கள் கூறுகின்றன.

மேற்படி கூறப்பட்ட தகவல்களின்படி ரிக்வேத உரையாசிரியர்களான சாயனர், வெங்கட மாதவன், வில்சன், கிரிபித் போன்றோர் ஹரியுபாவைத் தலைநகராகக் கொண்டு வரசினன் ஆண்டான் எனவும் கருதமுடியும் என்பர். ஹரியூபா நகரத்தில் வரசினனும் அவனது சந்ததியினரும் அழிக்கப்பட்டனர் ஏனையோர் அடிமையாக்கப்பட்டனர் (6.27.6.7) என ஒரு குறிப்பும் காணப்படுகின்றது. ஹறியூபா என்ற சொல் ஹரப்பா என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம் என சாயனர் ஏரு கூறும் (Rigveda Samhita, Vol.III 6-8). ஹரியூப்பியா (Haryupiya) நகரில் வரசிகனின் மகன் விருசிவானுடைய முன்னணிப் படையினை இந்திரன் கொன்றான் (6.27.5) அதல்விஜய நாட்டில் பணமே குறியாகக் கொண்ட தாசர்கள் வரசினனையும் சம்பரனையும் இந்திரன் அடித்தான். (6.47.21.) என்ற செய்திகளில் இருந்து தாசர்கள் என்பது திராவிடர்கள் என ஒரு சாராரும், கிரதகர்கள் (மலை சாதியினர்) ஆகலாம் என ஒரு சாராரும் கருதுகின்றனர். ஆனால் கிரதகர் கருப்பரல்ல மஞ்சள் நிற மங்கோலியர். இன்றும் திபேத்தின், முண்டா ஆதிவாசிகளில் இச்சாயலைக் காணலாம். ஆரியர்களோ இருவரையும் சேர்த்தேதாசர்கள், தஸ்யுக்கள் எனவர்ணித்தனர் (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, ப.7). எப்படியிருப்பினும் ஆரி மக்களது வருகைக்கு முன்னர் வடமேற் இந்தியாவில் ஆரியரல்லாத சிந்துவெளி பூர்வீகக் குடிகள் வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது அவர்களை ஆரியர்கள் தாஸர்கள், தஸ்யுக்கள் என அழை;த்தனர் என்பது புலனாகின்றது. அவர்களை ஆரியர்கள் தாஸர்கள், தஸ்யுக்கள் என அழைத்தனர் என்பது மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகின்றது.

அவ்வாறாக சிந்தவெளி மக்களது கலாசார வீழ்ச்சிக்கு யுத்தமும் ஒரு காரணம் எனவும் மேற்போந்த செய்திகளால் அறியப்படுகின்றது. மேலும் அவர்களது பொருளியல் வளர்ச்சி பற்றி சுருக்கமாக நோக்கினால் அவர்கள் பெரும் செல்வந்தர்கள் எனவும் ஆய்வாளர் எடுத்துக் காட்டினர். இது பற்றிய குறிப்புக்களையும் ரிக்வேதம் தரத்தவறவில்லை. தாசர்கள் 'பணி' எனப்படும் செல்வந்தர்களாகவும் விளங்கினர். அவர்கள் வணிகராக செல்வந்தராக ஆரியரல்லாதவராகவும் கூறப்பட்டுள்ளனர். (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, பக்-79-85)ரிஷி கிருத்ஸமன் கூற்றுப்படி 'பணி'களின் செல்வத்தை ஆரியஞானிகள் அடைந்தான் (2.24.5) பணிகளின் பசுக்களையும் செல்வத்தையும் இந்திரன் திருடிச் சென்று கிருத்ஸமரிடையே விநியோகித்தான் என (5.34.7) சம்வரனர் கூறுகிறார். இவ்வாறு பணிகள் (வியாபாரிகள்) பற்றி (1.33.3, 6.51.14) பல குறிப்புக்கள் உள்ளன. இவற்றினால் சிந்துவெளி மக்கள் செல்வத்தில் சிறந்திருந்தனர் என்பதும் பதிவாகியுள்ளது. 'பணி' இனத்தவர்கள் செல்வச் செழிப்புடன் இருந்தவர்கள். அவர்களுடன் நிறைய்ப் பசுக்கள் இருந்தன. அவர்களிடம் ஆரியர்கட்கு அவ்வப்போது சச்சரவுகளும் நடந்துள்ளன. 'பணி' என்றால் பண்ய (விற்பது) ஆப்பண் (கடைவீதி) வணிக்(பணியா,வியாபாரி) எனப் பல்வேறு சொற்கள் தோன்றின. ரிக்வேதம் பணி

இனத்தவர்கள் பற்றி பல்வேறு இடங்களில் பேசுகின்றது. 'பணி இக மக்கள் 'ஆட்சியை இா;ந்தாலும் உயர்ந்த கலாசாரத்தைக் கொண்ட சிந்து இனத்திற்கு மிகவும் பொருத்தமானரே' இப் பணி இனத்தவரே சிந்துவெளி நகரத்தின் பிரதிநிதிகள் என்பர் ராகுல்ஜி. *(ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, பக்-79-85)*

**சிந்து மக்களின் சமய கலாசாரம்**

அடுத்து மேற்குறிப்பிட்ட சிந்து இன மக்களின் சமய கலாசாரம், பண்பாடு பற்றியும் ரிக்வேதம் தரும் செய்திகளைச் சுருக்கமாக ஆராய்வது அவசியமாகும். ஆரிய மக்கள் தமது பகைவர்களை 'தஸ்யூக்கள்' எனக் குறிப்பிடுகின்றனர். தாசர்கள் மலைவாழ் ஆதிவாசிகள் என்பது பொதுவான கருத்து. அவர்களை பிற்கால ஆய்வாளர்கள் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு திராவிடரது முன்னோடிகள் என்பர். இந்தக் கருப்பு தாசர்களை இந்திரன் அழித்தான் (2.20.7) இந்திரன் கருநிறம் கொண்டவர்களைக் கொன்றான் (1.130.8) வசிட்டர் அவர்களைச் சிஷ்னாதேவர் எனக் (7.21.5) குறிப்பிடுவார் சிஷ்ணதேவர் என்போர் லிங்க யோனி வழிபாடு உடையவர். சிவலிங்கத்தை வழிபடுவோர் மலையில் வாழ்பவர்(10.99.3) அவர்களால் பூசிக்கப்பட்ட கற்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. எனவே லிங்கயோனியை வழிபடுபவர் ரிக்வேத சத்தியத்தை அழித்துவிடுவாரோ எனவும் கவலைகொண்டனர். அதனை வடக்கு விரோதிகளின் மாயாஞாலம் மந்திரதந்திரமென்றும் (7.18.21, 2.9.10.11) எனவும் அவர்கள் பயந்தனர். இந்திரன் கருப்பர்களின் கற்கோட்டைகளை அழித்தான் என கிருத்ஸமத் (2.20.8) திவோதாஸ் தாஸர்களுடன் ஜீவமரணப் போராட்டம் நடத்தியபோது குறிப்பிட்டுள்ளார். *(சிவசாமி. வி., 1973, பக்-99-100)*

சிவலிங்கத்தை வழிபடுவோர் மலையில் வாழ்பவராவர் (10.99.3) இவ்வாறு ரிக்வேதகால மக்கள் ஆரம்பநிலையில் புராதன இந்தியப் பா;ங்குடிமக்களை பகைவர்களாகக் கருதியமை ரிக்வேத பாடல்களால் அறியப் படுகின்றது. காலப்போக்கில் இரண்டு இனக் குழுவினருக்குமிடையே உறவுமுறை, புரிந்துணர்வு, ஒத்துழைப்பு என்ற பண்புகள் மேலோங்கியபோது இருவரதும் சமய வழிபாடுகள், பண்பாடுகள் என்பனவும் ஒன்றிணைந்து வளர்ச்சி கண்டமையினை பிற்பட்ட வேதமான யசுர் வேதகாலத்தில் காணமுடியும். யசுர் வேதகால பாடல்கள் காட்டும் ருத்ர சிவவழிபாடு, ஸ்ரீருத்திரம் பகுதி, நமசிவாய என்னும் சிவமந்திரம் போன்ற யாவும் ரிக்வேதகாலம் பகைமையுடன் பார்க்கப்பட்ட ருத்திரக் கடவுள் யசுர் வேதகாலம் தலைமைக் கடவுளாக உயர்த்தப்பட்ட நிலையினைத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளன. இத்தகைய பண்பாட்டு கலாசார வளர்ச் சிகளின் கூட்டுறவு, பரிமாணங்கள் என் பவற்றின் அம்சங்களாகவே பிற்காலம் இதிகாசபுராணங்கள் பெருவளர்ச்சி கண்டன. இவற்றிலே வேதகால ரிஷிகள் சிவனைப் பரம்பொருளாகவும், ஸ்ரீகிருஷ்ணனை அவதாரமூர்த்தியாகவும் பாடிப்பரவிய நெறிமுறைகள் பெரு வளர்ச்சியடைந்தன.

எனவே 'சிந்துவெளி நகரங்களை ஆரியமக்கள் அழித்தனரே தவிர அவர்களது நாகரிகங்களை அல்ல' என்பது இதனால் வெளிப்படுகின்றது. பெருங்கற் பண்பாட்டு வளர்ச்சி தொடர்பாக இரும்பினையும் செம்பினையும் சமகாலத்தில் இணைத்துப் பாவித்த ஒரு பண்பாடப்க அக்காலம் விளங்குகின்றது. ஆரிய சமூகம் உபயோகிக்காத 'மட்பாண்ட அலகினை' அடித்தளமாகக் கொண்டே தீபகற்ப இந்தியாவில் இப்பண்பாடு முகிழ்த்திருந்தால் இவை தென்னாட்டுப் பண்பாட்டு மூலக்கூறுகளுடன் அடையாளம் காணப்படுகின்றது. எனவே பெருங்கற்

பண்பாடு. திராவிடருக்குரியதென்பதனை முதன் முதல் ஆணித்தரமாக எடுத்துக்காட் டியவர் Christopvon furer Haim ehdosh என்பாராகும்.(கிருஷ்ணராசா.செ., 1999, ப.88). திராவிடரும் மலைவாசிகளும் ஒருவரா என்ற ஆய்வே சிவசமயங்களில் வரும்காலத்தில் எழுந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. எது எப்படியாயினும் சிந்துவெளி இனமக்களின் பண்பாடு, வழிபாடுகள் தீபகற்ப இந்தியாவின் முதலாவது நாகரிகத்தின் திறவுகோல் என்பது மட்டுமன்றி புராதன இந்துக்களின் புகழ்பூத்த நாகரிகம் என்பதனை மேற்குறிப்பிடும் செய்திகள் அறிவிக்கின்றன என்பதில் ஐய மில்லை. சிந்துவெளி நாகரிகமும்சரி வேத கால நாகரிகமும் சரி இரண்டுமே அந்திய நாகரி கங்கள் இந்துக்களின் நாகரிகங்கள் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

ரிக்வேதத்தில் சிந்துவெளி மக்களின் வாழ்க்கைமுறையும், வழிபாட்டுச்சின்னங்களும் ஒருவித கசப்பு மனப்பான்மையுடன் நோக்கப்பட்டுள்ள சாயல் தெரிவதனை எந்த ஆய்வாளரும் மறுக்கவில்லை என்பது ஓர் வரலாற்றுண்மையாகும். காலப்போக்கில் சிந்துவெளிப் பண்பாட்டில் எந்தெந்த அம்சங்களை ஆரியமக்கள் வெறுத்தனரோ அவையாவும் முன்னுரிமை பெற்று முழு நிறைவுடன் ஆரிய மக்கள் கலாசாரத்தில் முழுமைபெற்றமையினை பிற்பட்ட வேதகால இலக்கியங்கள் துல்லியமாகத் தெரிவிக்கின்றன. அதிலும் குறிப்பாக ரிக்வேதத்தில் சிவவழிபாடு சக்திவழிபாடு என்பன பெரிதும் பிரபல்யம் பெற்றிராத காலம். ஆனால் ஹரப்பா கலாசாரத்தில் தாய்மை வழிபாடு பிரபல்யம் பெற்றிருந்தது. ஆனால் பிற்பட்ட வேதநூல்களில் உதாரணமாக யசுர்வேதம். சதரூத்திரியம், சாமவேதம் அதர் வேதம் - பசுபதி வழிபாடு, உபநிடதங்களில் பிரமம் - நிர்குணம், சகுனம் இப்படியான சிந்தனை வளர்ச்சியில் சுவேதஸ்வதரம் உருத்திரசிவனை பரப்பிரம்மமாகவும் விளக்கியது.

உருத்திர சிவவழிபாட்டினை விளக்கிய மார்ஷல் என்பார் குறிப்பிட்ட சிவன் திரிசூலம் எருது ஏனைய விலங்குகளின் கூட்டத்துடன் சேர்ந்த யோகியின் அடையாளமுடைய முத்திரை வேதங்களில் வர்ணிக்கும் பசுபதியான உருத்திரசிவனே என தக்காரே என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார் இதனை பலரும் ஏற்பர். (தக்காரே.க.வா., 1990, ப.01)முந்துசிவன் (proto - Type of Shiva) முத்தலையுடைய சிவன் நடராஜராகவும் வழிபடப்பட்டவர் என மாஷல் கூறுவர். அத்துடன் சிந்துவெளியில் லிங்க வழிபாடும் தலைசிறந்ததாக மார்சல் மட்டுமன்றி தற்கால ஆய்வாளர்கள் பலரும் ஏற்கின்றனர். லிங்க வழிபாடு தொடர்பான தற்கால ஆய்வுகள் அதன் தொன்மையினை வலியுறுத்துவனவாக வெளிப்படுகின்றன.

சிந்துவெளியில் சிவலிங்கவழிபாடு நிலைபெற்றிருந்ததாகக் கூறும் மார்ஷலின் குறிப்பினை ரிக்வேதம் சிஷ்ணதேவர்களை வழிபடுவோர் எனக் கேலியாகக் கூறியதுடன் ஒப்பிடலாம். அவர்களது சமய வழிபாட்டு முறைகள் தமக்கு தேவையற்றவை எனவும் ரிக்வேதக் கூற்றுக்கள் அமைந்தன. அதனைப் தக்காரே போன்றவர் ஏற்கமறுத்தாலும் (Marshal Sri John., 1930, p.52) இத்தகைய கருத்து ஆதாரமற்றது என்பதனை பயசேவிஸ் (Fair Services. W. 1971) என்பார் தகுந்த ஆதாரத்துடன் நிறுவியுள்ளார். இவ் ஆய்வாளரால் ஹரப்பாவில் பானை ஒன்றில் பத்திரமாக வைக்கப்பட்ட லிங்கமும் அதனுடன் சேர்ந்த ஆவுடையாரும் கண்டுபிடிக்கப்பட்டமை லிங்க வழிபாட்டின் தொன்மையினை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்தது.(சிற்றம்பலம், சி.க., 1985, ப.84).

சிந்துவெளி சிவலிங்க வழிபாடு பற்றி புதிய கற்கால நாகரிகம் பற்றி ஆராய்ந்த Allchin B என்பாரும் ஆல்சின் F.R. போன்றோர் வாயிலாகவும் இங்கு காணப்படும் ஆண் பெண் உருவங்களும் அருவுருவ நிலையில் உள்ள லிங்க

வழிபாடும் காணப்பட்டதாகவும் செய்திகள் உள்ளன. தென்னகத்திலும் புதிய கற்கால மக்கள் லிங்கவழிபாட்டில் ஈடுபட்டிருந் தனர் என்பதனை புறுஸ்பூற் என்பாரும் கர்நாடகமாநிலம் பெலரி மாவட்டத்தில் புராதன கல்லில் வடித்த சிவலிங்கச் சிற்பங்கள் காணப்படுகின்றன எனக் கூறுகின்றார். (சிற்றம்பலம், சி.க., *1991*, பக்.29,30,51).

இவற்றால். சிந்துவெளி மக்கள் வழிபாட் டினை புராதன அம்சங்களைத் தாமதாக்கியும் கொண்டனர். இவற்றில்குறிப்பாக சிவன், சக்தி, லிங்கவழிபாடு, உருவவழிபாடு, பக்திமார்க்கம் என்பன படிப்படியாக வேதஇலக்கியங்களான பிராமணங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்களில் ஏற்கப்பட்டு சங்கமித்தன என்பதனை சுனில்குமார் சட்டர்ஜி, ஜடம்தார் போன்றோர் நன்கு விளக்கியுள்ளனர். இதனால் புராதன வேதகலாசார அம்சங்கள் எவைஎனக் கண்டுபிடிப்பதே மிகச் சிரமமான காரியம் என தனிநாயகம் அடிகளும் குறிப்பிட்டுள்ளார். இவ்விதமாக கலாசார ரீதியில் சிந்துவெளிக் கலாசாரம் மத்தியதரைப்பண்பாடுகளைக் கொண்டதாக இருப்பதனையும் அறிஞர் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர். (சிற்றம்பலம், சி.க., *1985*, பக்.142 - 145).

அடுத்து தாய்த்தெய்வ வழிபாட்டினை நோக்கினால் புதிய கற்காலமான விவசாய சமூகத்தில் நிலமகளைத் தெய்வமாக உருவகப் படுத்தி வணங்கும் வழிபாடும் காணப்பட்டது. புராதனகாலம் பெண் வெறும் இனவிருத்தியின் அம்சமாகவே மதித்து வழிபடப்பட்டாள். சிந்துவெளித் தாய்த் தெய்வ முத்திரைகளில் சிறிவத்ஸவ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் ஒன்று தலைகீழாக தத்தம் பெண்ணின்(வயிற்றிலிருந்து)கர்ப்பத்திலிருந்து கிளம்பும் செடி, மற்றொன்று ஆண் பெண் உருவங்களில்ஒருகையில்கொழுவும்மறுகையில் பிடிமண்ணும் உள்ள வடிவமுமாகும். உா;வர் சமூகத்தில் இது இனவிருத்தியுடன்கலப்பையும் மண்ணும் விவசாய பொருளாதாரத்தையும் புலப்படுத்தும் குறிப்பாகும். இவை யாவும் இனவிருத்தியில் பங்குகொண்ட அன்னையின் சிறப்பென்பர். (Sri Vatsava., M.C.P., *1978*). இவ்வாறே தலைவிரிகோலத்துடன் தலையில் கொம்புடனும் ஒரு பெண், மரத்தின் அருகில் முழந்தாளிட்ட பக்தனும், ஆடும். ஏழு பெண்வடிவங்களும் உள்ளன. இதனைத் துர்க்கையும் சப்தமாதர்களும் எனவும் வியாக்கியானம் கொடுப்பர். இத்தகைய பெண் தெய்வங்கள எகிப்திய நாகரிகங் களிலும் உண்டு. வேதகாலம் இடம் பெற்ற பெண் தெய்வங்களில் உமை, அதிதி, பிருதுவி என்பன குறிப்பிடத்தக்கவையாகும் வைகறைப் பொழுதை உஷையாகவும் சூரியன் சிவனின் காதலனாகவும் சிவனே சராசரங்களின் தலைவனாகவும் அங்கு வர்ணிக்கப் படுகின்றான். இதுவும் இனவிருத்திக் கோட்பாட்டைப் புலப்படுத்துவதாகவும் கொள்ளலாம் (சிற்றம்பலம், சி.க., *1985*, பக். 84 - 85).

மேற்காசிய நாடுகளில் புராதன காலத்தில் தாய்வழி உரிமைச் சமூக அமைப்பு நிலவியது. திராவிட சமூகத்திலும் இம்முறை காணப்பட்டது. இன்னும் திராவிட இந்தி யாவில் இம்முறைகளின் எச்சங்கள் உள்ளன. நாகவழிபாடு, லிங்கவழிபாடு மேற்காசிய நாடுகள் பலவற்றிலும் காணப்பட்டன. ரிக்வேத ஆரியர் லிங்க வழிபாட்டினைக் கண்டித்துள்ளமை மேற்கூறப்பட்டது. தாய்கடவுள் வணக்கமும் மேற்காசியா, ஹரப்பா, தென்னிந்தியாவிலும் சிறப்புப் பெற்றது. மா - என்பதும் உமா என்னும் பதத்தினை நினைவூட்டும். சுமேரி யர்களின் கோயில் அமைப்புக்கள், பூசை முறைகள், அமுதுபடைத்தல் என்பன இன்னும் தென்னகக் கோயில்களின் வழக்கங்களை நினைவூட்டுகின்றன. (சிவசாமி.வி., *1973*, பக்.9 - 12). குறிப்பாக தாய்த் தெய்வழிபாடானது பிற்பட்ட வேதகால மக்களிடையேயும்

முக்கியத்துவம் பெற்றமையினை தேவீசூக்தம், துர்க்கா சூக்தம், ஸ்ரீசூக்தம்கேன உபநிடதம் ஆகிய வற்றிலிருந்து உணரமுடியும்.

இறந்தோரை அடக்கம் செய்யப்பட்ட முறை, கல்லறைகளின் அமைப்புமுறைகளை அவதானித்தால் அம்மக்கள் ஓர் உயர்ந்த நாகரிகமுடையவர்கள் எனவும் திராவிட மொழிகளைப் பேசினர் எனவும் முடிவு ஏற்படும். கற்காலங்களில் நிலவிய கிரியைகள், நம்பிக்கை மரபுகள், ஒரு மனிதனைச் சிறப்பாக அடக்கம் செய்யும்விதம் என்பனவற்றை காணும்போது ஒருவனது உடல் அழிவதே தவிர ஆத்மா அழிவதில்லை என்ற நம்பிக்கை யின் வெளிப்பாடுகள் போல் அவை தோன்று கின்றன. (சிற்றம்பலம், சி.க., 1991, ப.53).

**முடிவுரை**

இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து சிந்துப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மனிதர் மொசப்பட்டேமியா, எகிப்திய மக்களைப் போல் தனித்தனிக் கடவுளரை வழிபட்டனர் என்பதும், வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால் ஆரிய வர்த்தகத்தில் வாழ்ந்த ஆரிய மக்கட்கு அவை எல்லாம் பிடிக்கவில்லை. குறிப்பாக சிந்துமக்களின் இலிங்க வழிபாட்டையே கேலிபேசியவர்களாக முற்பட்ட வேதகால மக்கள் இருந்தனர் என்பதும் ரிக்வேதம் தரும் செய்திகளில் இருந்தே பெறப்படுகின்றன.

சைவமும் சிவவழிபாடும் வேதகாலத்தில் தான் தோன்றியது என்று சொல்பவர்கள் கூட சிந்து நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களின் தெய்வமான சிவனுடன் வைதிக சமயத்து உருத்திரன் இணைக்கப்பட்டான் என்பதனை ஒப்புக் கொண்ட பின்பும் சிந்துவெளி நாகரிகம் பண்பாடு தொல்பொருட்கள் என்பன காட்டும் பண்பாடு கற்பனைச் சித்திரம் என்று சொல்வது மிகவும் வேடிக்கையானது. இருக்குவேத உருத்திரன் சிவனுக்கு முற்பட்டவன் என்று சொல்லும் அறிஞர்கள் இன்று பலர் உள்ளனர். ஹரப்பா என்னும் நகரமே ரிக்வேதம் கூறும் ஹரியூபா (RV. 6.27.5) எனவும் அறிஞர் ஏற்றுள்ளனர். (Nilakanda Sastri, K.A., 1963, p.18). சிவன் என்னும் சொல் திராவிடச் சொல் இது பிற்காலத்தில் வடமொழி அறிஞராலும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் விளக்கப்பட்டுள்ளன.

சிந்துவெளியில் உயர்நாகரிகத்தைக் கட்டி யெழுப்பிய மக்கள் ஆரியரல்லாதார் அவர்கள் திராவிடர்கள் (கிராதகர்கள், தேவவாசிகள்) அவர்களது தலைநகரங்களுள் ஒன்று ஹரியூபா எனப்படும் ஹரப்பா என்பதும் அவர்களது மொழி திராவிட மொழிக்குடும்பம் சார்ந்தது என்பதுவும் இருக்குவேதம் தரும் அகச்சான்றுகளிலிருந்தே பெறப்பட்டுள்ளன. அதனை மார்ஷல் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை (சித்தலிங்கையா, ரி.பி., 1998, பக்.10 -11, 1-2). ஆராய்ந்து கூறியுள்ளனர் என்பதும் இங்கு புலப்படுகின்றது. அதனால் சிந்துவெளி மக்கள் திராவிடரா அல்லாதாரா என்பதனைவிட அவர்கள் மத்தியதரைக் கடற்பிரதேசத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த புராதன இனமக்கள் என்பது ரிக்வேத பாடல்களால் உறுதிசெய்யப்பட்டிருப்பது சிந்துவெளி நாகரிகம் பற்றிய கற்பனைச் சித்திரத்தினை உறுதிப்படுத்தும் முக்கிய ஆவணமாகவும் கருதப்படக்கூடிய வலிமை வாய்ந்தது எனலாம். எனவே சிந்துவெளி நாகரிகமானது இந்தியமக்கட்குச் சொந்தமான உலகின் முன்னோடியான நாகரிகமாகவும் இந்து நாகரிகத்தின் முன்னோடியாகவும் முதல் மூத்த நாகரிகமாகவும் விளங்கிய பெருமையினை இருக்குவேதபாடல்கள் உடன்பாடாக அன்றி - எதிர்மறை மொழிகளால் வலுப்படுத்தியிருப்பது திக்வேதமே சிந்துவெளியின் ஓர் சிறந்த இலக்கிய ஆதாரமாக ஏன் கொள்ளக்கூடாது. ஏன் சிந்தனையை தோற்றுவிப்பதாக உள்ளது. சிந்து வெளி நாகரிகத்திற்கான இலக்கிய ஆதாரம் ஆரிய மக்களுடைய இருக்குவேதத்திலேயே கிடைத்துவிட்டது என இனிப் புதிய வரலாறு

எழுதும் காலம் எளிதில் கைகூடலாம் என்பதே எதிர்கால இந்துக்களின் வேணவா ஆகும்.

1990 வரை சிந்துவெளி நாகரிகத்திற்கும் இந்து நாகரிகத்திற்கும் தொடர்பில்லை என்றகாலமே இன்று மாறிவருகின்றது. சிந்துவெளி நாகரிகம் பற்றிய தகவல்கள் 1980களிலிருந்து ஆய்வுகளாக வெளிவரத் தொடங்கிவிட்டன. இருபத்தைந்து வருடங்களில் சிந்துவெளி நாகரிகத்திற்கு இருக்குவேதமே திறவுகோலாக - ஆதார இலக்கியமாக அமைந்துள்ளமையினை மேற்குறித்த அறிஞர், ஆய்வாளர் தகவல்கள் வெளிக்கொணர்வதற்காகவுள்ளன. 1990 இல் T.V தகாரே என்பார் சிவவழிபாடு சிவயோகி வழிபாகடுகட்கு எந்த ஆதாரமுமில்லை என எழுதும் போது 1999 இல் ராகுல் சாங்கிருத்தியாயன் என்பார் இருக்குவேதமும் சிந்துவெளி நாகரிகத்தின் தகவல்மையமே பல என்பதனைப் பல தகவல் தேடல்களுடன் வெளிக்கொணர்ந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, பக்.4 - 12). இவை பற்றிய ஆராச்சிகள் மேலும் மேலும் ஆய்வுப்பொருளாக இருப்பதனால் புதிய தகவல்களைப் பொறுத்திருந்து அவதானிக்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


தமிழ்

1. வித்தியானந்தன்.சு. தமிழர்சால்பு. தமிழ் மன்றம். கண்டி. 1954.
2. சுப்பிரமணியன். நா. கௌசல்யா சுப்பிரமணியன். இந்தியச் சிந்தனைமரபு. சவுத் ஏசியன் புக்ஸ். சென்னை, 1993.ப. பரமேஸ்வரன்,எம்.பி. சிந்துவின் கதை. சென்னை, 1990.
3. ராகுல் சாங்கிருத்தியாயன். இந்து தத்துவ இயல். நியூசெஞ்சுரி புக்ஹவுஸ். சென்னை, 1985.

   சிவசாமி. வி. ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும். இலங்கை. 1996.
4. சிவசாமி. வி. திராவிடர் ஆதிவரலாறும் பண்பாடும். யாழ்ப்பாணம். 1973.

   குருமூர்த்தி. சா., தொல் பொருளாய்வும் தமிழர் பண்பாடும் சென்னைப் பல்கலைக்கழகம். 1974
5. சிற்றம்பலம். சி.க. பண்டைய தமி:கம். யாழ்ப்பாணப் பல்கலைக்கா:கம். 1991
6. மதிவாணன். இரா.சிந்துவெளி எழுத்தின் திறவு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கா:க வெளியீடு. 1991

   ராகுல் சாங்கிருத்தியான். ரிக்வேதகால ஆரியர்கள். தமிழில்: ஏ.ஜி. எத்திராஜலு. சென்னை. 1991.
7. சிவசாமி. வி. திராவிடர் ஆதிவரலாறும் பண்பாடும். யாழ்ப்பாணம். 1973

   கிருஷ்ணராசா. செ. இலங்கை வரலாறு. பாகம் 1. யாழ்ப்பாணம். 1999
8. தக்காரே. க. வா. டாக்டர் சைவதத்துவம் (தமிழில்) கா.ஸ்ரீ.ஸ்ரீனிவாசன். சென்னை. 1990.
9. சி.க சிற்றம்பலம்., 'தாய்மை வழிபாட்டின் தொன்மை', சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள். சிவத்தமிழ்ச் வொர்லவி மணிவிழாச்சபை வெளியீடு தெல்லிப்பழை. 1985
10. சிற்றம்பலம். சி.க பண்டைய தமிழகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1991

    கைலாசபதி. க. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும். நியூ செஞ்சரி புக்ஹவுஸ். சென்னை. 1991. பக் 6 - 10
11. லீலாவதி இராமநாதன்.. கைலாசநாக் குருக்கள். கா. இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகள். பெருமாட்டி நினைவுப் பேருரை. 1985.

12. சித்தலிங்கையா, ரிபி, சைவசயத் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை, 1998

13. மதிவாணன், டாக்டர், இரா. சிந்துவெளி எழுத்தின்திறவு, சென்னை, 1991

ஆங்கில நூல்கள்

1. Wheeler, M., The Indus Civilization, 1947 New Delhi.
2. Gorden Childe, The Aryans, 1970, Oxfort University Press, Londan.
3. Astoparrolo, Seppo Koskenniemi and others Decipherment of the proto Dravidians Inscsiptions of the Indus Civilization, Copenhagen,1969,2 Part.
4. Mahadevan, I., 'Recent Advances in the study of Indus Script', 'Puratattva, No. 9, 1977 - 78.
5. Allana, Dr, Vice Chancellor of Islamabad University, pakistan, Antiguity of S.indhi Research paper)
6. Borrow, T. Collected papers or Dravidian Lingustic, Annamalai Nagar, 1968
7. Rigveda Samhita with Syanachenya Commenty, Vol.III, 6-8, Mandalas. Rigveda by venkata madhava, prt IV,V,VI
8. Marshal, Sir John., Mohanjadro and Indus Civilization, Vol. I, London 1921-1930
9. Vedic ege, History and Culture of the indian Peple/ Vol.I Bharathiya Vidyabhavan/ Bomby1965 Plate VII
10. Vats M. S., Excavations at Harrappa, Calcutta, 1940.
11. Srivatsava, M.C.P., 'Mother Goddess in indian Art', New Delhi, 1978.
12. Nilankanda Sastri, K.A., Devolopment of Religion in south india, 1963.